**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், புதுக்கோட்டை.**
**(கூடுதல் சார்பு நீதிமன்றம், புதுக்கோட்டை.)**

**Deposition of Witness for P.W.1**

**MCOP. No. 328 /2022**

சாட்சியின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு. ராஜேஸ்வரி கிரேடு–II பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குணசேகரன் | தகப்பனார் பெயர் | : | ரெங்கன் |
| கிராமம் | : | வெட்டன்விடுதி | தாலுகா | : | கறம்பக்குடி |
| வயது | : | 45 | தொழில் | : | வெல்டிங் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 on the day of 07.02.2025.
ம.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

என் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை, நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன்.

1. முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்கிறேன், (முதல் தகவல் அறிக்கை இணையவழி நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

2. மருத்துவமனை விடுவிப்பு சான்றை தாக்கல் செய்கிறேன் (மருத்துவமனை விடுவிப்பு சான்று அசல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

3. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆர்.சி புத்தக நகல் தாக்கல் செய்கிறேன். (TN 55 W 8271 வாகனத்தின் பதிவு புத்தகம் இணைய வழி நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

4. மேற்படி வாகனத்திற்கான விவரக்குறிப்பை தாக்கல் செய்கிறேன் (வாகனத்தின் விவரக்குறிப்பு இணையவழி நகல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

5. எனது ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன்,( ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

6. எனது வங்கிக்கணக்கு புத்தகத்தின் முதல் பக்கவிவரத்தை தாக்கல் செய்கிறேன்.(வங்கி கணக்கு புத்தக முதல் பக்க விவரம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)

7. நான் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான மருத்துவ பில்களை தாக்கல் செய்கிறேன்(மருத்துவ பில்கள் ம.சா.ஆ.7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது)

8. எனக்கு எடுக்கப்பட்ட ஸ்கேன் ரிப்போர்ட் களை தாக்கல் செய்கிறேன். (ஸ்கேன் ரிப்போர்ட் 4 எண்ணிக்கை ம.சா.ஆ.8 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது)

9. எனக்கு எடுக்கப்பட்ட X–Ray க்களை தாக்கல் செய்கிறேன். (X–Ray க்கள் ம.சா.ஆ.9 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது)

மனுப்படி உத்தரவாக பிரார்த்திக்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் பதிவு எண் TN 55 BC 2138 ஆகும். எனது வாகனத்தின்மீது மோதிய வண்டியின் எண் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வண்டியின் எண் TN 55 W 8271 என்றால் சரிதான். அந்த வாகனத்தை ஓட்டிய நபர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால சரிதான். நான் சொல்லும் TN 55 W 8271 என்ற வாகனத்திற்கு இரண்டாம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு எதுவும் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது வாகனத்திற்கு சோழமண்டலம்

நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளேன் என்றால சரிதான். இரண்டாம் எதிர்மனுதாரர் இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும்இரண்டு வாகனங்களும் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படாத நிலையில் 2ம் எதிர்மனுதாரர் இந்த மனுவிற்கு தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. இந்த மனுவானது 2ம் எதிர்மனுதாரரை பொருத்துதள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே எந்த காப்பீட்டு ஒப்பந்தமும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ஒம்/.குணசேகரன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/.எல்.ரகுபதிராஜா
கூடுதல் சார்பு நீதிபதி,
புதுக்கோட்டை.